**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.101/2024**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.2**ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பெருமாள் | வட்டம் | : | சத்தியமங்கலம் |
| த/பெ. | : | | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | குத்தியாலத்தூர் | வயது | : | 56 |

**வா.சா.2 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் 3ம் நபர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 2 பிரதிவாதிகளின் பூமியின் சர்வே எண் எனக்கு தெரியாது. வாதிகளின் பூமியின் சர்வே எண் எனக்கு தெரியாது. என்னுடன் சேர்ந்து சமாதானம் செய்ய வந்த நபர்களின் பெயரை பிரமாண பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் உழுவு ஓட்ட வந்த சொத்தின் சர்வே எண் நினைவில் இல்லை. வாதியின் பூமிக்கு வந்ததாக சொல்லப்படும் டிராக்டரின் பதிவு எண், ஓட்டுநர் பெயர், உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது. வாதிகள் கேட்டுக்கொண்டதன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.01.30 14:18:42 +0530

District Munsif